பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 5உ (21—8—67) திங்கள் ★ வெளியூர்: ஆவணி 6உ (22—8—67) செவ்வாய் [இதழ்: 57

நன்னம்பிக்கை தரும் தமிழக உணவு நிலை

நாகர்கோயில், ஆக. 21—

'தஞ்சைமாவட்டத்தில் ஆடுதுறை 27 வகை நெல் சாகுபடி மூலம் 5-இலட்சம் டன் கூடுதலாக அரிசி கிடைக்கும்; இதனால், வரும் நவம்பர் திங்களுக்குப்பின் தமிழ்நாடு, உணவு நிலையில் தன்னிறைவு பெற்றுவிடும்; இந்த ஆண்டு முடிவுக்குள் தமிழ்நாடு முழுவதிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்த முடியும்" என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறினார்.

'நிதிநிலை நெருக்கடியை திறமையுடன் சமாளித்து வருகிறோம்'

'பெரிய பாங்கிகள் ஒத்துழையாமைக்கு வருந்துகிறேன்'

'தமிழக அரசின் கடனில் தாராள முதலீடு செய்யுங்கள்'— பாங்கி அதிபர்கள் — தொழிலதிபர்களிடை முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள்

சென்னை, ஆக. 20—

தமிழக அரசு எழுப்பியுள்ள புதிய 17 கோடி ரூபாய்க் கடனில் முதலீடு செய்யுமாறு பெரிய பாங்கிகளுக்கு முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள் விடுத்தார்.

பெரிய பாங்கிகளின் அதிபர்களான எம். ஏ. முத்தையா செட்டியார், எஸ். நாராயணசாமி, ஏ. நாகப்பசெட்டியார், கே. வேங்கட்ராமன் ஆகியோர் முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று, பாங்கி அதிபர்கள், தொழிலதிபர்கள் அடங்கிய கூட்டமொன்றில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் உரையாற்றியபோதே இந்த வேண்டுகோளை விடுத்தார்கள்.

பொருளாதாரத் துறையில் உறுதியான நிலை ஏற்பட மாநில அரசு கடன் எழுப்பும் திட்டங்களுக்கு பெரிய பாங்கிகள் ஆதரவு தர முன்வராதிருப்பதுகுறித்து அண்ணா அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள்.

கடந்த மார்ச்சுத் திங்களில் மின் கழகம் எழுப்பிய கடன் திட்டத்துக்கு மகத்தான ஒத்துழைப்புக் கிடைத்தது குறித்து அண்ணா பாராட்டுத் தெரிவித்தார்.

அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது:—

"தற்போது அரசுக்கு ரூ. 6.5 கோடி அளவுக்குத்தான் பணம் தேவைப்படுகிறது. ஏற்கனவே பொதுமக்களிடையே எழுப்பிய பெரும் கடன் தொகையான ரூ. 10.5 கோடியைத் திருப்பித் தர வேண்டிய நாள், வருகிற செப்டம்பர் முதல் வருகிறது. இதை ஈடுசெய்யவே புதிய கடன் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.

புதிய கடன் வெளியீட்டில் எதிர்பார்க்கப்பட்டதைவிடச் சிறிது கூடுதலான வட்டி அறிவிக்கப்பட்டிருப்பது, முந்திய கடன்களை விடக் கவர்ச்சி தரக்கூடியதாக அமைந்துள்ளது. முன்பு 5½ சதவிகிதம்தான் வட்டி நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

நிதிநிலை நெருக்கடிகளைத் தமிழக அரசு மிகவும் எச்சரிக்கையுடனும், திறமையுடனும் சமாளித்து வருகிறது.

தற்போது, தமிழக அரசுக்கு ரிசர்வ் பாங்கியில், அதிகப்பற்று எதுவுமில்லை. அரசின் வருவாய் இரண்டாம் திட்ட இறுதியில் ரூ. 90 கோடியாக இருந்தது— இந்த ஆண்டில் ஏறக்குறைய ரூ. 216 கோடியாக உயர்ந்துள்ளது.

மேலும், இவ்வாண்டு ரூ. 5.25 கோடிவரை கூடுதலாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு—வசதிகளைக் கண அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்களிடையே வாங்கப்பெறும் கடன் தொகை முழுவதுமே உற்பத்திக் காரியங்களில் முதலிடவே பயன்படுத்தப்படும். அரசின் முதலீட்டுத் திட்டத்தின் பயனாக மின் சக்தி உற்பத்தியும், விநியோகமும் சிறப்பிடம் பெறும்.''

துயர்துடைப்பு நிதி

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு, ஆக. 17-ந் தேதிவரையில் ரூ. 18,12,87.52 சேர்ந்துள்ளது.

இந்திரா காந்தியின் கூற்றுக்கு டாக்டர் ஏ. இலட்சுமணசாமி பதில்

'ஆங்கிலம் அறிந்தவர்கள் தொகை ஒரு சதவிகிதம் என்பது தவறு'

கல்வித்துறையில் அரசியல் தலையீட்டுக்குக்கண்டனம்

சென்னை, ஆக. 19—

"இந்தியாவில் ஒரு சதவிகித மக்களுக்கே ஆங்கிலம் தெரியும் என்று கூறுவது தவறு; ஆங்கிலம் தெரிந்தவர்களின் சதவிகிதம் ஏற்கனவே அதிகமாக உள்ளது. அனைவருக்கும் கல்வி வசதி தரப்படுவதாலும், மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்படுவதாலும், ஆங்கிலம் அறிந்தோரின் சதவிகிதம் சீராக உயர்ந்துவருகிறது. நகரங்களில் மட்டுமன்றி சிற்றூர்களிலும் கூட 100-க்கு 100 பேர் விரைவில் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டுவிடுவர்"

என்று, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏ. இலட்சுமணசாமி (முதலியார்), அவருக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் எச்சரித்ததாவது:—

"கல்வி நிபுணர்களுக்கேயுரிய கல்வித் தொடர்பான பிரச்சினைகளில் அரசியல்வாதிகள் தலையிட்டு, அரசியல் நோக்குடன் செயல்படுவது கூடாது."

வெளிநாட்டாரும் வியந்து பாராட்டுகின்றனர்

நம் நாட்டவர் தொழில் நுணுக்க அறிவுத் திறன் பற்றி அண்ணா

கிண்டி பொறியியற் கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் உரை

சென்னை, ஆக. 21—

"தொழில் நுணுக்க அறிவில் நம்மவர்கள் 'உலகில் வேறு யாருக்கும் சளைத்தவர்களல்லர்' என்ற நற்பெயரைத் தேடிவருகிறார்கள். ஒருமுறை உந்திவிட்டால் போதும்—வெகு தூரம் முன்னேறிவிடுவார்கள்; நம்முடன் ஒத்துழைக்க வரும் அயல்நாட்டவர் அனைவரும் அதைத்தான் சொல்லுகிறார்கள்!

"சீனா மட்டும் நம்முடன் ஒத்துழைத்திருந்தால், தென் கிழக்காசியா முழுவதையும் தொழில் மயமாக்கி வளமடையச் செய்யும் அளவுக்கு நாம் பெற்றுள்ள தொழில் திறன் பயன்பட்டிருக்கும்! துரதிருஷ்டவசமாக உலகில் நாகரிக நாடுகள் எதனோடும் சீனா நண்பனாக இருக்க மறுத்துவருகிறது"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், கிண்டி பொறியியற் கல்லூரியில் பேசுகையில் குறிபபிட்டார்.

இந்திய மோட்டார் எஞ்சினீயர்கள் சங்கத்தின் மாநாடும்—பட்டமளிப்பு விழாவும் இன்று சென்னை கிண்டி எஞ்சினீயரிங் கல்லூரியின் விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெற்றது.

குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி, விழாவுக்குத் தலைமை ஏற்றுப் பட்டங்களை வழங்கினார்.

விழாவை முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இச்சங்கத் துணைத் தலைவர் என். பாலகிருஷ்ணா வரவேற்றுப் பேசினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்நாட்டின் தொழில் வளத்திலே — இதன் வெற்றியிலே விருப்பம் உள்ள எவரும், இந்தச் சங்கம் தன் முயற்சிகளில் வெற்றி பெறவும், விரிந்தும் பரந்தும் வளர்ச்சியுறவும் வாழ்த்துரைக்கவே செய்வர்.

என் ஆசியை வேண்டுவதாக இங்கே பேசிய சங்கப் பிரமுகர்கள் கூறினர். நமக்கெல்லாம் ஆசி கூறவேண்டியவர், வயதில் முதிர்ந்த நம் குடியரசின் துணைத் தலைவர் வி. வி. கிரி ஆவார். கடந்த அரை நூற்றாண்டுக்கு மேல் இந்நாட்டின் அரசியல்—பொருளாதார வாழ்வில் நெருக்கமான தொடர்புகொண்டு உழைத்தவர்!

இந்நாட்டின் இயற்கை வளத்தை அவர் அறிவார். அந்த வளம் மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தப்படாமல் கிடப்பதையும் அவர் அறிவார்!

கிரி அவர்கள் பதவியிலிருந்த போதும் — இல்லாதபோதும்— இந்நாட்டுக்குச் சிறந்த தொண்டாற்றி வந்திருக்கிறார்.

அவரது வாழ்வே பிறரது உள்ளத்தில் நம்பிக்கை உணர்ச்சி ஊட்டத்தக்கதாக அமைந்துள்ளது!

உங்களுக்கும் எனக்கும் ஆசி கூறும்படி அவரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சங்கம் தனது தலைமை நிலையத்தைச் சென்னையில் கொண்டுள்ளதென்பதறிந்து மகிழ்ச்சி. நிதானத் தன்மையையும், நிலையான தன்மையையும் சென்னை பிரதிபலித்துக்காட்டுகின்றது.

இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சங்கம், விரிந்து பரந்து வளர்ந்து வெற்றி பல பெறும்; இதனால், தொழில் உலகம் முழுவதுமே நற்பலன் பெறும் என்பதும் உறுதி."

ஜி. டி. நாயுடுவுக்கு வி. வி. கிரி பாராட்டு

இச்சங்கத்தின் சிறப்பு உறுப்பினராக கோவை ஜி. டி. நாயுடு அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; இதற்குரிய சான்றிதழை வி. வி. கிரி வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஜி. டி. நாயுடுவைப் பாராட்டுகிறேன். அவருக்கு இந்தச் சிறப்பை அளிப்பதன் மூலம் இச்சங்கம் தன்னைத்தானே மதிப்பில் உயர்த்திக்கொள்கிறது."

பட்டங்களை வழங்கி வி. வி. கிரி பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"சென்னையில் துவக்கப்படுகிற எதுவானாலும் வெற்றி பெற்று நாட்டுக்கே வழிகாட்டுவதாகவும் விளங்கும். இதில் சந்தேகமில்லை. ஜி. டி. நாயுடு இத்தொழிலை முற்றும் அறிந்தவர்.

1938-ல் திட்டத்தின் தேவையை உணர்ந்து நாடு முழுமைக்குமாக திட்டம் வகுக்கப்பட நான் முன்னின்றேன். திட்டக் குழு என்பது, திட்டம் தயாரிப்பதோடு நிற்கவேண்டும்!

திட்டத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பை மாநில அரசுகளிடமே விட்டுவிட வேண்டும்— தலையிடுவது கூடாது!

எந்தக் கட்சி எங்கே ஆளுகிறது என்று கவலை கொள்ளாமல் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லவும், அரசியலில் கண்டுள்ள அடிப்படை உரிமைகளை நாம் எல்லோரும் அடையவும் மக்கள் அந்த அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.''

தமிழக அரசின் மொழிக் கொள்கைக்கு வரவேற்பு

இணைப்பு மொழியாக இந்தி ஆக்கப்படுவதுபற்றி எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 19—

"'ஆங்கிலமே இந்தியாவின் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும்' என்று தமிழக அரசு தெளிவாகக் கூறியிருப்பதை, மேற்கு வங்கம்—ஒரிசா—அசாம் ஆகிய மாநிலங்களிலும், மற்ற இந்தி பேசாத மாநிலங்களிலும் உள்ள எல்லாப் பிரிவினரும் வரவேற்கின்றனர்"

என்று நாடாளுமன்ற உறுப்பினர் எச். சி. சாட்டர்ஜி கூறினார்.

"ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிப்பதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டால் அது இந்தியாவுக்கே கெட்ட நாளாகும்; அது நாட்டின் ஒற்றுமையைச் சிதறடிக்கும்" என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

இந்தியை ஆதரிப்பார் யார்?

"ஆங்கிலத்தை ஆதரிப்பவர்கள் சுயநலக்காரர்கள்" என்று பெங்களூரில் இந்தி ஆசிரியர்களிடையே பேசிய டில்லி அமைச்சர் ஷேர் சிங் கூறினார்.

"எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் இந்தியைக் கட்டாயமாக்க வேண்டும்; கல்லூரி ஆசிரியர்களுக்குத் தருவது போன்ற சம்பளத்தைப் பள்ளிகளில் வேலை செய்யும் இந்தி ஆசிரியர்களுக்கும் தர வேண்டும்; அவர்களுக்குப் பதவி உயர்வுகள் தரப்படவேண்டும்"

என்று அதே கூட்டத்தில் பல தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 5 (21—8—67) திங்கள்

சட்டம்-ஒழுங்கைக் காக்கும் பேச்சா?

சுதந்தர நாள் ஊர்வலம் என்ற பெயரால், சென்னை மவுண்ட் ரோடில் வெறியாட்டம் ஆடிக்கொண்டுவந்த காங்கிரசுக் கும்பல், 'முரசொலி' அலுவலகத்தைத் தாக்கி நாசம் விளைவித்திருக்கிறது. இப்படிக் காங்கிரசுக் கும்பல் விளைவித்திருக்கின்ற நாசத்துக்கு, 'முரசொலி' அலுவலகத்திலிருந்து தங்களுக்கு ஆத்திரமூட்டப்பட்டதாக ஒரு கற்பனைக் கதையை வேறு அந்தக் கும்பல் கட்டிவிட்டிருக்கிறது!

'காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்' என இந்தக் காலத்தில் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றவர்களில், காந்தியார் காட்டிய அறவழியைத் தெரிந்தவர்களாக ஒருவர் இருவர்கூட இருக்க முடியாது! அந்த உலக உத்தமர் காட்டிய அறவழி, அப்பெருந்தகை மறைவதற்கு முன்னரே மறைந்து போய்விட்டது!

இப்பொழுது, 'காங்கிரசுக் கட்சியினர்' எனக் கூறப்பட்டு வருகின்றவர்கள் அனைவரும், குறிப்பிட்ட பணிக்குத் தற்காலிகமாக எழுதப்படாத ஒப்பந்தத்தின் கீழ் அக்கட்சியில் சேர்க்கப்பட்டிருப்பவர்களாவர்! இக்காலத்துக் காங்கிரசுக் கட்சியினரின் உண்மை வரலாறு இதுதான்!

இவ்வுண்மையை மெய்ப்பிக்க, இன்றையக் காங்கிரசு மேடைகளில் கொக்கரித்துவருகின்றவர்களின் அரசியல் பூர்வாச்சிரமமே போதிய சான்றாகும்.

காங்கிரசுக் கட்சிக்காக இன்று ஏடெழுதுகின்றவர்களின் உண்மை நிலவரம், பேச்சாளர் வரலாற்றைப் போன்றதே ஆகும்.

இன்றையக் காங்கிரசுக் கட்சி அடைந்திருக்கக்கூடிய இந்தப் படுபாதாள வீழ்ச்சிக்கு, குறிப்பிட்ட பணிபுரிய என, மறைமுக ஒப்பந்தத்தின் கீழ் திரட்டப்பட்டிருக்கின்ற—மேலே எடுத்துக் காட்டியுள்ள மூன்று வகைக் காங்கிரசுக் கட்சியினர் பொறுப்பாளிகளல்லர். அம்மூன்று வகையினரின் உழைப்பின் மீதும்—அவர்களின் அறிவாற்றல் மீதும் நம்பிக்கை வைத்து, அவர்களைக் காங்கிரசுக் கட்சிக்குள் அணைத்துக்கொண்டு, அவர்களை அறத்தின் நீங்கிய அக்கிரமத்தைச் செய்ய முழு அளவில் உற்சாகத்துடன் ஊக்கமூட்டி வருகின்ற—காந்திய அறவழியைத் தெரிந்துகொண்டிருக்கின்ற—ஆனால் அன்றுமுதல் இன்றுவரை -- என்றும் பின்பற்றிச் செயல்பட்டு வரவேண்டும் எனக் கனவிலும் நினைத்தறியாத—அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவரும், அவர் நிலைக்கு உயர்ந்திருக்கின்ற மற்றவர்களும் முழுப் பொறுப்பாளிகள் ஆவர்.

அரசியல் கட்சித் தலைவர்கள் என்பவர்கள் தாங்கள் பேசுகின்ற பேச்சிலும், எழுதுகின்ற எழுத்திலும், அறவழியைப் பின்பற்ற வேண்டும்; தங்கள் பேச்சாலும் எழுத்தாலும், சட்டத்தையும் ஒழுங்கையும் காத்துவர முயற்சிக்க வேண்டும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் குலைத்திடக்கூடிய முறையில், மறந்தும், அரசியல் தலைவர்கள் எனப்படுகின்றவர்கள் பேசவும் கூடாது—எழுதவும் கூடாது. ஆத்திரத்தைக் கிளப்பும் வகையிலும், வன்முறைக்கு வித்திடும் வகையிலும், அரசியல் தலைவர்கள் எனப்படுகின்றவர்கள் அறவே பேசக்கூடாது.

இத்தகைய சிறந்த பண்பை, அரசியல் தலைவர்கள் எனப்படுகின்றவர்கள் செயல்படுத்திவந்தால்தான், சட்டமும் ஒழுங்கும் நன்கு பாதுகாக்கப்படும். 'குத்துங்கள் -- வெட்டுங்கள்' என்ற விரும்பத்தகாத கடுமையான சொற்களைச் சொன்னால் மட்டுந்தான் சட்டமும் ஒழுங்கும் கெடத்தக்க வகையில் எழுதினதாகவும், பேசியதாகவும் பொருளல்ல. இதோ—'அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்' என்ற உயர்ந்த இடத்துக்கு உயர்த்தப்பட்டிருக்கின்ற காமராசர் பேசியிருப்பதுபோல் பேசுவதுகூட, சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் உலை வைத்துவிடக்கூடியதுதான்!

> "நமது விளம்பரத் தட்டிகளை அகற்றிவிட்டார்கள் என்று இங்கே பேசிக்கொண்டிருந்தார்கள். நமது பொருளை—நமக்குச் சொந்தமானதை ஒருவன் எடுக்கிறான் என்றால் அவன் திருடன்தானே?
>
> "அவன் யாராயிருந்தால் என்ன? போலீசாக இருந்தால் என்ன? இன்னொருவர் பொருளை எடுப்பவன் திருடன்தானே?
>
> "நமது பொருள் திருட்டுப்போனால், நாம் போலீசில் 'கம்ப்ளேயிண்ட்' செய்யணும். போலீசு நடவடிக்கை எடுக்கலன்னா, நாமே போலீசாக மாறிடணும்! நான்தான் முன்னேயே சொல்லியிருக்கனே!
>
> "தட்டியில் எழுதலாம். எழுதுவதற்கு உரிமை இருக்கு! ஏதாவது தப்பா எழுதியிருந்தா கேஸ் போடு."

நாட்டில் கொந்தளிப்பையும் குழப்பத்தையும் உருவாக்கவும், அதன் விளைவாகச் சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கவும், 'அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்' என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருக்கின்ற காமராசர் பேசியிருக்கின்ற பேச்சைவிட, வேறு பேச்சு வேண்டுமா?

என்ன செய்வது? உலக உத்தமரின் அறவழிப் பள்ளியில் பயின்றவர்—அந்த உத்தமரின் வழிவந்தவர்—காந்தியாரின் வாரிசு—சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பதில் கருத்துடையவர்—என்றெல்லாம் புகழ்ந்து பேசப்படுகின்ற 'பெரியவர்' எனப்படும் காமராசரின் அரசியல் பண்பு இதுதான்!

இந்த நல்லவரால், சட்டமா காப்பாற்றப்படும்? ஒழுங்கா பாதுகாக்கப்படும்?

நாட்டின் நல்லறிவாளர்கள் கூறட்டும் தீர்ப்பு!

—கா. க.

இந்தியஒற்றுமைக்கே 'உலை' வைக்கும் திட்டம்

டில்லியின் கல்விக் கொள்கை பற்றிக் கேரள ஏடு எச்சரிக்கை

கேரளத்திலிருந்து வெளிவரும் 'மாத்ருபூமி' என்ற காங்கிரசு நாளிதழ், 11—8—67 அன்று 'மொழிப் பிரச்சினைபற்றி மீண்டும்...' என்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது:—

"பல்கலைக் கழகங்களின் பயிற்சி மொழி, வட்டார மொழியாக இருக்க வேண்டுமென்றும், தொழில் நுணுக்கப் பள்ளிகளில்கூட, வட்டார மொழி, பயிற்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது,

இத்துடன், இந்தியாவின் பொது மொழி அல்லது இணைப்புமொழி என்ற நிலையில், இந்தியின் முக்கியத்துவத்தைக் கருதி எஞ்சினீயரிங் கல்லூரி—மருத்துவக் கல்லூரி போன்ற அனைத்திந்திய நிறுவனங்களில், பயிற்சி மொழி இந்தியாக இருக்குமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் இந்த முடிவு, கல்வியமைச்சர் போன்றோரின் அறிக்கைகள் மூலமாக இதற்குள்ளேயே வெளியாகிவிட்டிருந்தது. அதற்கு எதிராகக் கண்டனக் குரல்களும் கிளம்பியிருந்தன. இருந்தும், 'அரசின் முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை' என்று சில நாட்களுக்குமுன் தலைமையமைச்சர் தம்மிடம் சொன்னதாக, பிராங்க் அந்தோணி அவர்கள் கருத்தாழமிக்க அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்; 'இந்தியை வளர்க்கவும் பரப்பவுமான இந்த ஆர்வம், ஆங்கிலத்தைக் கணிசமான அளவுக்கு அழித்தாலன்றி வெற்றி பெறாது' என்று தலைமையமைச்சரே ஒத்துக்கொண்டதையும் பிராங்க் அந்தோணி சுட்டிக்காட்டினார்.

வெளிப்படையாகச் சொன்னால் 'மத்திய அமைச்சரவை முழுவதும் இந்தி வெறியர்களுடையவும், ஆங்கில விரோதிகளுடையவும் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருக்கிறது' என்று பிராங்க் அந்தோணி குற்றஞ் சாட்டுகிறார்.

அவசரப்பட்டு எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளில்ஆழ்ந்து கிடக்கக்கூடிய ஆபத்துக்களைப் பற்றி அண்மையில்கூட இந்தப் பகுதியில் நாம் எழுதியிருந்தோம்; 'அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு மாற்றம் ஏற்படாதென்றால், அது, இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சிக்கு வித்திடுவதாகும்' என்று குறிப்பிட்டிருந்தோம்; இப்பொழுதும் அதையே குறிப்பிட விரும்புகிறோம்.

ஒற்றுமையைப் பற்றியும், தேசிய உணர்ச்சியைப் பற்றியும் நாளும் பல்லவி பாடிக்கொண்டிருக்கும் நாம், இந்த முடிவு மூலம், இன்று இருக்கக்கூடிய ஒற்றுமைக்கே உலை வைக்கத் தீவிரம் காட்டுகிறோம் என்று கூறுவதற்கு நாம் தயங்கவில்லை.

ஆங்கில மொழியிடம் கண்மூடித்தனமான காதலோ, இந்தி மொழியிடம் வெறுப்போ நமக்கு இல்லை; மாறாக, இரண்டு மொழிகளுக்கும் இன்று நாட்டில் உள்ள இடமும் முக்கியத்துவம் குறித்த உண்மை உணர்வும், ஆவேசமான நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய பலன்கள் குறித்து அச்சமும்தான், இப்படி எழுதக்கூடிய நிலைக்கு எங்களைக் கொண்டுவந்திருக்கிறது.

'பல்கலைக் கழகங்களின் பயிற்சி மொழி வட்டார மொழியாக இருக்க வேண்டும்' என்று சொல்லுவதில் ஓரளவாவது பொருளும், நியாயமும் உண்டு. (ஓரளவு என்று சொல்லுவது அதன் பொருளை முற்றிலும் உணர்ந்துதான்).

கணிசமாக வளர்ச்சியடைந்துள்ள இந்தியாவின் பல மொழிகளிலும் பயிற்சி நடத்தப்படுவதே வெற்றி பெறுமா என்பதில் ஐயம்கொள்ள வேண்டியுள்ளது.

இந்நிலையில், ஏனைய பல வட்டார மொழிகள் அளவுக்கேகூட வளர்ச்சி பெற்றில்லாத இந்தி, கட்டாயமாகப் பயிற்சி மொழி ஆக்கப்படுமானால், அதன் விளைவு எப்படியிருக்கும்?

நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் வெறி காரணமாக ஒரே மூச்சில் செய்ய முற்படுவது, நீந்தத் தெரியாதவனைத் தண்ணீரில் தள்ளுவதற்கு ஒப்பாகும்!

'நீந்தத் தெரிந்த பிறகுதான் நீரில் இறங்க வேண்டுமா?' என்ற எதிர்க் கேள்வி ஒன்று கேட்கப்படலாம்; அதற்கு, 'நீந்தத் தெரிந்தவனையும் தெரியாதவனையும், ஒரே நேரத்தில் நீரில் தள்ளுவதில் மிகவும் எச்சரிக்கை காட்ட வேண்டாமா' என்று நாமும் திருப்பிக் கேட்கலாமல்லவா?

மத்திய அரசின் முடிவால் ஏற்படக்கூடிய ஆபத்து இதைவிடக் கடுமையானதாகும்.

கல்லூரிகளிலிருந்து கற்று வெளிவரும் மாணவர்களுக்கு, அந்தந்த மொழி மாநிலங்களிலேயே தொழில் புரிவதற்கு வாய்ப்பு அளித்து வாழ வைக்கக்கூடிய வசதியும் திறமையும் நம்மிடம் உள்ளதா?

குறிப்பாக, கேரளத்தைப் போன்ற பின்தங்கிய மாநிலங்களில் அது முடியுமா? முடியாதென்றால், வெளி மாநிலங்களில் சென்று தொழில் செய்து பிழைக்கக்கூடிய வாய்ப்பை இல்லாதாக்குவது, மேற்படி திட்டத்தின் முதற்பலனாக அமையாதா?

விஞ்ஞானிகளும், அறிவாளிகளும் இன்னமும் ஏராளமாகத் தேவைப்படும் இந்தியாவில், மொழிவாரியாக அமைக்கப்பட்டிருக்கும் மாநிலங்களின் குறுகிய எல்லைக்குள் அறிவையும், ஆற்றலையும் அடைத்துவைக்கக் காட்டப்படும் ஆவேசம், நாட்டையும் எதிர்காலச் சந்ததியினரையும் கெடுப்பதற்கும், பின்தங்கச் செய்வதற்குமே உதவும் என்பது நிச்சயம்!

'அனைத்திந்திய விஞ்ஞானக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இந்தி இருக்கும்' என்ற முடிவு, வட்டார மொழிகளைப் பயிற்சி மொழியாக்குவதைவிட ஆபத்தானதாகும் என்பதைச் சொல்லாமலிருக்கமுடியவில்லை.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்களிடம் தனிப் பரிவு காட்டுவதாகவும் இதர மாநிலங்களிடம் கொடுமை வாய்ந்த ஓரவஞ்சனை காட்டப்படுவதாகவும்தான் இதைக் கருதவேண்டும்.

அப்படிப்பட்ட கல்லூரிகளிலிருந்து படித்து வெளியேறி வரும் மாணவர்களில் பெரும்பாலோர், இனி இந்திக்காரர்களாகவே இருப்பர்!

"இந்தி பேசாதவர்களைத் தத்தம் மாநிலங்களிலேயே அடைபட்டிருக்கச் செய்வதற்கும், இந்தி பேசுவோரை அனைத்திந்திய சர்வீசுகளின் எல்லா மட்டங்களிலும் நிரந்தரமாக நிலைத்திருக்கச் செய்வதற்கும் திட்டமிட்டுச் செய்யப்படும் ஒரு நடவடிக்கையாகும் இது" என்று யாராவது சொன்னால், அவர்களைக் குறை சொல்ல முடியுமா?

ஆங்கில மொழியிடம் இருக்கக்கூடிய வெறுப்பை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது; இந்தி மொழியிடம் இருக்கக்கூடிய பக்தியையும், இதர மாநில மொழிகளிடம் இருக்கக்கூடிய காதலையும் எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது; ஆனால், இந்தப் போக்கிற்கு அரசாங்கத்தைத் தூண்டும் மன நிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லை!

மொழி—மக்களுக்காக உள்ளதாகும்; மக்களேதான் நாடும்; அதனால், நாட்டின்—மக்களின் கருத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவாத மொழிக் கொள்கை, தவறானதாகும்.

ஊசி பொன்னால் செய்யப்பட்டதாயினும், கண்ணில் குத்தினால் ஆபத்தை விளைவிக்கும்!

'வளமிக்க ஒரு தேசிய மொழியை உண்டாக்குவதற்கும், அதன் மூலமாகத் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தவும்தான்' என்று சொல்லப்படினும்கூட, துணிச்சலான இந்நடவடிக்கை, இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பதற்கும்,வருங்காலத் தலைமுறையை நாசத்தில் தள்ளுவதற்குமே வழி வகுக்கும்!

கண்மூடித்தனமான இந்தி வெறி பிடித்திருக்கும் ஒரு சிலரின் கைகளில் நாட்டை ஒப்படைக்கும் இந்தத் துவக்கம், உண்மையில், 'இந்தியாவின் ஒற்றுமைச் சக்தியும் அழிய வேண்டும்' என்ற விருப்பமுடைய நாட்டுத் துரோகிகளைத்தான் மகிழ்ச்சியடையச் செய்யும்!"

எம் தாய்மொழிக்கு ஈடாகுமா உங்கள் மொழி?

இந்தி வெறியர்களிடை ஒரு தமிழ்க் குரல்!

'தினமான்' என்னும் இந்தி வார ஏடு டில்லியில் கூட்டிய கருத்தரங்கில் பேசிய இந்தி ஆலோசனைக் குழு உறுப்பினர் விசுவநாத வர்மா, 'அரசியல் சட்டத்தில் இந்தியை ஆட்சிமொழியாக்கியிராவிட்டால் ஒரு மாநில மொழி என்ற அளவில் அதற்கு நிறைந்த ஆதரவு கிடைத்திருக்கும்' என்று கூறினார். இவர், காலஞ்சென்ற இராசேந்திர பிரசாத்தின் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் எஸ். எம். ஜோஷி பேசுகையில், 'இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும் பகுதியினர் ஒப்புக்கொண்டவுடன், இந்தியை இணைப்பு மொழியாக்கிவிட வேண்டும்' என்று கூறினார்.

> "இன்று என்னுடைய தாய் மொழி தமிழில் எப்படிப்பட்ட ஆராய்ச்சியையும் நடத்தமுடியும். மக்கள் தொகையில் தமிழர்களைவிட ஐந்து மடங்கினராக இருந்தும் இன்று அதே விகிதத்தில் தமிழைப் போல இந்தியில் செய்தித்தாள்கள் ஏன் பெருகவில்லை?"

என்று வினவினார், டில்லியில் பேராசிரியராக உள்ள எம். எஸ். வெங்கடரமணி—தமது ஆங்கில உரையில்.

காங்கிரசுத் தலைவரின் நற்சான்று!

> "நக்சால்பாரியில் கம்யூனிஸ்டுகள் நடத்திவரும் கிளர்ச்சிக்கு வெளியார் உதவி எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை"

என்று, மேற்கு வங்காளக் காங்கிரசுத் தலைவர் அதுய்யா கோஷ், சென்னையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மத்திய அரசுமீது பழி சுமத்துவதாக நம்மீது பாய்வானேன்?

இருக்கும் நிலையை எடுத்துச் சொன்னால் ஏன் இவர்களுக்கு ஆத்திரம்?

விவரமறியாதவர்கள் எழுப்பும் வினக்களுக்கு அறிஞர் அண்ணா தரும் பதில்

“மாநில அரசுகளுக்கு இருப்பது ஒரு சில அதிகாரங்கள் தாம்! மத்திய ஆட்சியிடம் இருப்பதோ பல்வேறு அதிகாரங்கள்! இதைக் குறைத்து, ‘மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டும்’ என்று நாம் பல காலமாகச் சொல்லிவருகிறோம்!

“‘ரூபாய்க்குப் படி அரிசி தருவதுபோல்—ஏழை விவசாயி வயிற்றில் அடிக்க நினைப்பதுபோல்—பருப்பையும் தருவதுதானே’ என்று சிலர் பேசிவருகிறார்கள்!

“அப்படியே ரூபாய்க்கு ஒரு படி பருப்பு என்று யாராவது கொடுக்க முடிந்தவர்கள் கொடுத்தால், நான் கூட வாங்கிக் கொள்வேன்; ஆனால் நமக்குத் தேவையான பருப்பு வடநாட்டிலேயிருந்து வரவேண்டியுள்ளது! இது தெரியாத சிலர், நம்மீது குறைகூறி வருகிறார்கள்!

“அப்படி வடநாட்டிலிருந்து பருப்பு வாங்கி வரவும் மத்திய அரசின் அனுமதியை நாம் பெறவேண்டியுள்ளது!

“‘எதற்கெடுத்தாலும் எரவாணத்தைக் காட்டுகிறாயே—மத்திய அரசுமீது பழிபோடுகிறாயே’ என்றால், இருக்கும் இடத்தைக் காட்டத்தான் வேண்டியுள்ளது!”

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், வில்லிவாக்கத்தில், 15—8—67 விடுதலை நாளன்று படி அரிசித் திட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் விளக்கினார்கள். அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :—

“விடுதலை நாள் விழாவாகிய இன்று, மலிவு விலை அரிசித் திட்டத்தையும் துவக்கிவைப்பதிலே மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இப்படி, ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று நாம் விலை குறைத்து விற்பதாலேயே விலைவாசிகள் எல்லாம் குறைந்துவிட்டதாகாது. அப்படி நினைத்துக்கொள்ள நம்மில் யாரும் ஏமாளிகளும் அல்லர்!

சிலர், ‘அரிசி விலையைக் குறைத்தால் போதுமா? பருப்பு விலை என்ன ஆயிற்று? எண்ணெய் விலை என்னவாயிற்று?’ என்று விவரம் தெரியாமல் கேட்கிறார்கள்!

நமது வீட்டுக்கு வந்த விருந்தாளிக்கு ஒரு நாளைக்கு விருந்தளித்துவிடுவதாலேயே, கஷ்டமெல்லாம் வந்தவருக்குத் தீர்ந்ததாகப் பொருளில்லை!

அதுபோல், ‘விலைவாசிகளைக் குறைப்போம்’ என்பதில், ‘படி அரிசித் திட்டம்’ முதல் முயற்சி! படிப்படியாகத்தான் மற்றவைகளைக் கவனிக்க வேண்டும்!

ஏறிவிட்டுள்ள விலைவாசிகளைக் குறைக்க மத்திய அரசே முன்னின்று ஏதாவது செய்ய வேண்டும்.

இங்கே விளையும் அரிசியின் விலையைக் குறைத்து, ஏழை எளியவர்கள் பயனடையப் பாடுபடுகிறோம்—நம்மால் முடிந்தது இதுதான்!

மத்திய அரசில்கூட மொரார்ஜி தேசாய், விலைவாசிகளைக் குறைக்க முயன்றுவருவதாக அறிகிறேன். அவரது முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று நாமெல்லாம் இந்நன்னாளிலே வாழ்த்துவோம்.

நாம் அரிசி விலையைக் குறைத்துக் கொடுப்பதில்கூட — விவசாயிக்கு என்ன விலை கொடுத்தால் கட்டுப்படியாகுமோ அந்த விலை கொடுத்து வாங்கி—அவற்றைக் கொண்டுவரப் போக்குவரத்துச் செலவுகளை ஏற்கிறபோது, அரிசியின் விலை உயருகிறது! ஆகவே, ‘ரூபாய்க்குப் படி அரிசி’ என்பதிலே ஏற்படும் இழப்பை அரசு ஏற்றுக்கொண்டு, ஏழைகளுக்குத் தருகிறது. இப்படி ஏற்படும் இழப்பு சுமார் 8 கோடி ரூபாய்.

இதில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும், தமிழக அரசு தாங்கிக்கொண்டு, ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்யும்.

இந்தத் திட்டத்தை இன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் துவக்கிவைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டம் வெற்றி பெற அதிகாரிகளோடு ஈடுபாடு கொண்டு உணவு அமைச்சர் மதியழகன் பாடுபடுகிறார்.

உற்பத்தி பெருகினால்தான் இத திட்டம் வெற்றி பெறும். வேளாண்மைத் துறை அமைச்சர் கோவிந்தசாமி இந்த விழாவில் கலந்துகொள்வதன் மூலமும், வேளாண்மைத் துறைக்குத் தலைமை வகிப்பதன் மூலமும் அவர், தீவிரமாகப் பாடுபட்டுவருகிறார். அரசுக்கு ஏற்படும் நட்டத்தைச் சரிக்கட்ட நிதித் துறைச் சார்பில் நான் கலந்துகொள்கிறேன்.

நாம் செய்வதெல்லாம் சரியா தவறு என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி—கருத்தறிய—இங்கே கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் வந்திருக்கிறார்.

மிச்சமிருப்பதெல்லாம் பொதுமக்களாகிய உங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும்தான். நீங்கள் இந்த அரசுக்குப் பக்கபலமாக இருப்பீர்களானால், இந்தப் படி அரிசித் திட்டத்தைத் தமிழகம் முழுவதிலும் செயற்படுத்த விரைவில் திட்டமிடுவோம்.

இந்த ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில், ‘ஆடுதுறை—27’ என்கிற புதுரக நெல் பல இலட்சம் ஏக்கராக்களில்—ஒரு போகம் என்பதை இரண்டு போகமாக இருந்ததை மூன்று போகமாகவும்—பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயற்கை நல்லபடி ஒத்துழைத்தால், அக்டோபர் அறுவடையில் நாட்டிலே இருக்கிற பஞ்சம் தீர்ந்துவிடும்! அதிகாரிகளும், அறுவடையாகும் நெல்லை எவ்வளவு விரைவில் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் சொல்லலாம் என்பதிலே தீவிரமாக இப்போது ஈடுபட்டுள்ளனர்!

இதனால், நமது மாநிலத்தின் பற்றாக்குறை தீருவதுடன், அண்டை மாநிலமான கேரளத்துக்கும் நாம் உதவ முடியும்.

வங்களாத் துணை முதலமைச்சர் ஜோதிபாசு என்னிடம் வந்து பேசிக் கொண்டிருந்தபோது, ‘எங்களுக்கும் அரிசி உதவி அளிக்கவேண்டும்’ எனக் கேட்டுக் கொண்டார்.

இப்படி எல்லோருடைய நல்லெண்ணமும் வெற்றி பெற, ‘அக்டோபர் மாத அறுவடை நல்ல பலன் அளிக்கவேண்டும்’ என நாமெல்லாம் எண்ணுவோம்!

மார்ச் மாதம் 6-ந் தேதி நாங்கள் பதவியேற்றபோது மேட்டூர் அணையில் இருந்த நீர்மட்டம் 35 அடிதான்!

நம்மைப் பார்த்து, ‘பாவிகள் வருகிறார்கள்; நாடு பாலைவனமாகும்’ என்று சிலர் கூறியபோது நான்கூட அச்சப்பட்டேன்—‘எங்கே இயற்கை ஒத்துழைக்காமல் போய்விடுமோ? இவர்கள் வார்த்தை பலித்துவிடுமோ? என்று!

ஆனால் இன்றையத்தினம் மேட்டூரில் 104 அடி தண்ணீர் நிரம்பியுள்ளதாகச் செய்தித் தாளிலே காண்கிறோம். பவானி, குந்தா போன்ற நீர் நிலைகள்: நிரம்பியிருப்பதாக அறிகிறோம். ‘இது, நான் தருவித்த நிலை—எங்களுடைய சாதனை’ என்று சொல்லமாட்டேன்!

பகீரதன்தான் ஒருமுறை நீர் தருவித்ததாகப் புராணம் கூறுகிறது; ஆனால் இன்று இயற்கையின் அருளால் நல்ல நிலை ஏற்பட்டுள்ளது!

அக்டோபர் மாத அறுவடைக்குப் பிறகு, வேறு பல பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

இப்படி அதிகமாக நெல் விளைச்சல் எதிர்பார்ப்பதால், நெல்லின் விலையைக் குறைக்கலாமென்றாலோ, விவசாயியின் உற்பத்திச் செலவு இன்னும் குறைந்தபாடில்லை; ஆகவே, நெல் விலையைக் குறைக்கும் நோக்கம் நமக்கில்லை! எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும், அதை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்!

“இப்படிப் படி அரிசி திட்டத்தால் மற்ற விலைகள் குறைந்து மக்கள் நலமடைய வேண்டும் — ஏழைகள் நிம்மதியடைய வேண்டும் என்கிற எனது இதய ஆசையை கூறி, இத்திட்டத்தைத் துவக்கி வைக்கிறேன்.”

வாயால் கெட்டவர்கள் வன்செயலில் இறங்கியுள்ளனர்!

ஆத்திரத்தால் அறிவிழந்து அழிவைத் தேடிக் கொள்கின்றனர்

அமைச்சர் சத்தியவாணிமுத்து இடித்துரை

15-8-67 அன்று கோடம்பாக்கத்தில் நடந்த விடுதலை நாள் விழாவில் செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :—

“நாம் வெள்ளையனிடமிருந்து விடுதலைதான் பெற்றிருக்கிறோமே யொழிய இன்னும் சுதந்தரம் பெறவில்லை; சுதந்தர ஆட்சியும் நடக்கவில்லை. பெற்ற சுதந்தரத்தைப் பேணிக்காக்கவும் இல்லை.

இன்று இங்கே நாம் விடுதலை விழாக் கொண்டாடுகிறோம். இந்த விழாவுக்காக அலங்காரம் செய்துகொண்டிருந்த நமது தோழர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர். தாக்குண்டவர்கள் வந்து கதறுகிறார்கள் — ‘நாம் எதிர்க் கட்சியாக இருந்தபோதுதான் தாக்கப்பட்டோம்; இப்போது கூடவா தாக்கப்பட வேண்டும்?’ என்று!

அதைக் கேட்டதும், பெண்ணாகிய எனக்கே இரத்தம் கொதித்தது என்றால், ஆடவர்கட்கு எப்படிக் கொதிக்கும்—எவ்வளவு ஆத்திரம் பிறக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

‘பொறுத்தவர் பூமியாள்வார்’ என்பது பழமொழி. நாம் இவ்வளவு காலமாகப் பொறுத்துக் கொண்டு இருந்தோம் — இப்போது பூமி ஆளுகிறோம்—இன்னமும் பொறுத்துக் கொள்வோம்!

இன்று கடற்கரையில் காமராசர் பேசுகிறாராம். அவர் பேசுவதற்கு முன்னமேயே ‘முரசொலி’ அலுவலகத்தின முன் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்! காமராசர் கூட்டத்துக்கு முன்னமேயே அவர்கள், பக்கவாத்தியம் தட்ட ஆரம்பித்து விட்டிருக்கிறார்கள்!

இங்கே நாம் விடுதலை விழாக் கொண்டாடுவதற்காக அசோகச் சக்கரம் பொறித்த தேசியக் கொடியைக் கட்டியிருக்கிறோம்.

இதைக் கண்ட காங்கிரசுக்காரர்கள் சிலர், ‘எங்கள் கொடியை நீங்கள் ஏன் கட்டினீர்கள்?’ என்றுகேட்டு, அதை அறுத்தெறிந்திருக்கிறார்கள்! ‘இது அரசாங்கக் கொடியா? தங்கள் கட்சிக் கொடியா?’ என்பதுகூடப் புரியாத அப்பாவிகள் அவர்கள்!

இந்தக் கொடி எங்களுக்கும் சொந்தமில்லை— அவர்களுக்கும் சொந்தமில்லை --அரசாங்கத்தின் கொடி என்பதை அவர்களைப் புரிந்துகொள்ளச் செய்யவேண்டும்.

‘ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு’ என்பார்கள். அப்படிப்பட்ட ஆத்திரக்காரர்களும், அவசரக்காரர்களும் அங்கே இருக்கிறார்கள்! அதனால்தான், அறிவிழந்து வன்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்!

இப்படிப்பட்ட செயல்களே தங்கள் அழிவுக்குக் காரணமாக அமைந்தது என்பதை அவர்கள் இன்னமும் உணரவில்லை!

தேர்தல் நேரத்தில் வாயில் வந்தவாறெல்லாம் பேசினார்கள்;— ‘குத்துவோம்; கொல்லுவோம்’ என்றார்கள்; ‘நசுக்கிவிடுவோம்’ என்றார்கள்; கடைசியில் என்ன ஆனார்கள்?

‘யாரால் கெட்டாய்’ என்றால், ‘நோரால் (வாயால்) கெட்டேன்’ என்பது பழமொழி. அதைப் போல அவர்கள், வாயால் கெட்டார்கள்!

இப்போது தமிழகத்தில் நடைபெறும் ஆட்சியை எப்படி எதிர்ப்பது என்பதே புரியாமல் அவர்கள் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள்!

குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டது; உடனடியாக அறிஞர் அண்ணா அவர்கள், குடிசையிழந்த மக்களுக்கு உதவ நிதி திரட்டினார்; தீப்பற்றாத வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். வெள்ளத்தாலும் தீ விபத்துக்களாலும் அடிக்கடி பாதிக்கப்படும் சென்னைக் குடிசைவாழ் மக்களுக்கு நிரந்தரமான பரிகாரம் காண ஆவன செய்தார். வெள்ளத்தால் அழியாத—வெந்தணலில் வேகாத வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தென்னாட்டு காந்தியாக அறிஞர் அண்ணா அவர்கள் திகழ்கிறார்கள்! காந்தியைக்கூட பெரும்பாலும் காங்கிரசுக் கட்சிக்காரர்கள்தான் பாராட்டினார்கள்; அறிஞர் அண்ணா அவர்களை நாடே பாராட்டுகிறது!

யார் என்ன பேசினாலும், இறுதியில் வாய்மைதான் வெல்லும்—வாய்மைதான் வென்றிருக்கிறது!”

‘போராட்டம்’ என்ற பெயரால் காங்கிரசாரின் வெறிக் கூத்தாட்டம்!

அமைச்சர் மா. முத்துசாமி கண்டனம்

சென்னை—கோடம்பாக்கத்தில் நடந்த விடுதலை நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :—

“சுதந்தரம் கிடைத்து இருபது ஆண்டுகள் ஆனாலும், இங்கே கூடியுள்ள இலட்சோபலட்சம் மக்களுக்கு இதுதான் முதல் சுதந்தரத் திருநாளாகும்.

இந்த நாட்டின் விடுதலைக்காக எத்தனையோ பேர் தங்கள் இன்னுயிரைப் பணயமாக வைத்துப் போராடியிருக்கின்றனர்—வ.உ. சிதம்பரனார், திருப்பூர் குமரன், தில்லையாடி வள்ளியம்மை போன்றவர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்திருக்கின்றனர்!

‘கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற்’போல், இப்போது சிலர், ‘போராட்டம்’ நடத்துவதாகக் கூறி, ‘வெறியாட்டம்’ நடத்துகிறார்கள்—கூத்தாட்டம் போடுகிறார்கள்!

இவ்வளவு காலத்திற்குப் பிறகு இன்றாவது மகாத்மா காந்தியின் ஆத்மாவுக்கு சாந்தி ஏற்படும் என்று இருந்தோம்! அதையும் கெடுத்துவிட்டிருக்கிறார்கள்—கடற்கரைக் கூட்டம் நடத்தும் நண்பர்கள்!

பாரதப் போரில் பஞ்சபாண்டவர்களுக்குக் கௌரவர்கள் கொடுத்த தொல்லையைப் பொறுக்க முடியாமல் தம்பிமார்கள் நால்வரும் துடித்தெழுந்தனர்; ஆனால் தருமரோ, ‘எவ்வளவு தொல்லை கொடுத்த போதிலும், ‘பொறுங்கள், பொறுங்கள்’ என்றே சொல்லிக்கொண்டிருந்தார்!

அதைப்போல நமது அறிஞர் அண்ணா அவர்கள், ‘மாற்றார் நமக்கு எத்துணைத் தொல்லை கொடுத்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள்’ என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

‘பொறுமை—பொறுமை’ என்றே இப்படிச் சொல்லிக்கொண்டே இருந்தால், பொறுமைக்கும் ஓர் எல்லை வேண்டாமா?

அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைச் சிதைத்த பிறகும், நாம் அதையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டுமா?

எரிமலை என்றைக்கேனும் வெடித்தே தீரும்! என்போன்ற இலட்சோபலட்சம் காளையர் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்குக் கட்டுண்டு பொறுமையாக இருக்கிறோம்!

மறைவு

பெருமாநல்லூர் ‘நம் நாடு’ விற்பனையாளர் க.சுந்தரம் அவர்களின் தாயாரும் பெருமாநல்லூர் ஊராட்சித் துணைத் தலைவர் கு. கந்தசாமி அவர்களின் மனைவியாருமான இலட்சுமி அவர்கள், 14—8—67-ல் இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் தெரிவிக்கப்படுகிறது.

ஏரிக்குளம் ‘நம் நாடு’ விற்பனையாளர் தோழர் பெ. கரிகாலன் அவர்களின் பெண்மகவு, 16-8-67 அன்று இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

கேட்கும் கரங்களைக் காக்கும் கரங்களாக்குவோம்

இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் இணைப்பு ஏற்படுத்துவோம்

மதிய உணவு சமையற்கூடத் திறப்பு விழாவில் முதலமைச்சர் அண்ணா உரை

"இரும்புப் பெட்டிக்கும்—இதயத்திற்கும் இறைவன் சம்பந்தம் வைப்பதில்லை' என்று சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சினிமாவில் எழுதியிருந்தேன்; இது நமது நாட்டிற்குத்தான் பொருந்தும். ஏனெனில், அமெரிக்கர்களிடம் இரும்புப் பெட்டியும் இருக்கிறது—இதயமும் இருக்கிறது! இவை இரண்டிற்கும் இடையே, 'மற்றவர்களுக்கு உதவவேண்டும்' என்கிற தொடர்பும் இருக்கிறது!

"ஆனால், நம்மிடம் இதயம் இருந்தால் இரும்புப் பெட்டி இல்லை—இரும்புப் பெட்டி இருந்தால் இதயம் இருப்பதில்லை!

"அமெரிக்கர்கள் பல தலைமுறைகள் உழைத்து, தங்கள் கரங்களை வலுவாக்கிக்கொண்டு, இன்று நமக்கு உதவுவதுபோல்,நாமும் நமது கரங்களுக்கு வலிவு ஏற்படுத்திக் கொள்ளுவதுடன், 'காக்கும் கரங்க'ளாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும்! ஆனால் இன்று நமது கரங்கள், மற்றவர்களை, 'கேட்கும் கரங்க'ளாகத்தான் உள்ளது!

"ஆகவே, 'காக்கும் கரங்களாக்குவோம்' என்ற முயற்சியில் எவ்வளவு கரடுமுரடான -- கடுமையான பாதையாக இருந்தாலும், அதில் நடைபோடுவோம் என்று உறுதியுடன் சூளுரைத்துக் கொள்ளுவோமாக!"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், 15—8—67 அன்று பூவிருந்தவல்லி—சேக்காட்டில் நடைபெற்ற மதிய உணவுமையச் சமையற்கூடத் திறப்புவிழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது:—

"நம்முடைய குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தை நாம் பல்லாண்டுகளாக நடத்தி வந்தாலும், 'அதை எப்படிச் செம்மையாக நடத்தவாம்' என்பதை, இன்று நமக்குக் 'கேர்' நிறுவனத்தினர் எடுத்துக் காட்டியுள்ளனர்; அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

நமக்கும் — அமெரிக்கர்களுக்கும் உள்ள நட்பால் இத்தயைய பல நல்ல திட்டங்களை -- நன்மைகளை உதவிகளை நாம் பெற்று வருகிறோம்.

ஆருயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அமெரிக்கர்கள் நமது நாட்டிற்கு வந்து, தொழிற்சாலைகள்—கல்விக்கூடங்கள் — மருத்துவமனைகள் முதலியவற்றை அமைத்து உதவுகிறார்கள்— இன்று இந்த மதிய உணவுத் திட்டத்தின் மூலம் உதவ முன் வந்துள்ளார்கள்.

ஓர் அமெரிக்கத் தொழிலாளி— தான் சம்பாதிப்பதில் தனக்குப் போக மீதியை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவ வேண்டும் என்கிற எண்ணத்தில் பாடுபடுகிறான்.

ஒவ்வொரு அமெரிக்க விவசாயியும் — தான் பலனடைந்தது போக மற்றும் ஏழு பேருக்கும் சேர்த்துப் பயிரிடுவதாக நான் படித்திருக்கிறேன்.

இந்த மத்திய உணவுக்கூடத்தைத் திறப்பதின் மூலம், 52 பள்ளிகளில் பயிலும் 3,000 பிள்ளைகளுக்கு, இன்று அமெரிக்கரின் பேருதவி கிடைக்க இருக்கிறது. இதனால் அவர்களின் கொடைத் திறனையும், உலகின் மற்றப் பகுதியில் நலிவுற்றவர்களுக்கு உதவும் அவர்களது மனத்தையும் நமது குழந்தைகள் புரிந்து கொள்ள இருக்கிறார்கள்.

'கேர்' நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் என்னைச் சந்தித்து—இந்தத் திட்டத்தைத் துவக்க யோசனை கேட்டபோது 'இதை ஆகஸ்டு 15 அன்று துவக்க வேண்டும்' என்றேன்; இடையில் ஒரு மாதம்கூட இல்லையே; அதற்குள் முடியுமா?' என்று கூறி யோசனை செய்துவிட்டு, 'சரி; எப்படியும் முடிக்கிறோம்' என்று கூறிவிட்டு, வந்து இந்தக் குறுகிய காலத்தில் இதனைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

பொட்டல் காடாகக் கிடந்த இந்த இடத்தைச் சீர்செய்து, விவசாயப் பண்ணைக்கேற்றவாறு உருவாக்கியுள்ளனர். அவர்களது உழைப்பில—நம்பிக்கையில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையுள்ளது!

இங்கே நாமெல்லாம் இப்படி ஆயிரக்கணக்கில் கூடி—குழந்தைகளும், ஆசிரியருமாகச் சேர்ந்து இரண்டு -- மூன்று மணி நேரமாக விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், இங்கே இருக்கும் அமெரிக்கர்கள், 'இப்படிக் கூடி நேரத்தை வீணாக்குவதால் எத்தனை மணி நேரம் மனித சக்தி வீணாகியிருக்கும்' என்றுதான் கணக்கிட்டுக் கொண்டிருப்பார்கள்!

ஆகவே, கடல்கடந்து வந்து உதவும் அமெரிக்கரின் கொடை உள்ளத்திற்கு மீண்டும் நன்றி செலுத்துகிறேன்.

இந்த மதிய உணவுத் திட்டத்தை இரண்டு விதத்திலே நடத்தலாம்; ஒன்று—அரசாங்கமே தேவையான பணத்தைச் செலவிட்டு உணவளிப்பது; இன்னொன்று—நிரந்தரமாக இப்படிக் 'கேர்' நிறுவனம் ஏற்பாடு செய்திருப்பதுபோல் நாடு முழுவதும் விரிவுபடுத்துவது.

முதலில் சொன்ன திட்டம்போல் அரசாங்கம் என்றும் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்க முடியாது; ஆகவே, இரண்டாவது சொன்ன இந்தக் 'கேர்' நிறுவனத் திட்டத்தையே படிப்படியாக நாட்டின் வேறு பல பகுதிகளுக்கும் ஏற்படுத்தத் தமிழக அரசு முயற்சி செய்து வருகிறது.

இம்முயற்சி நல்ல முறையில் வளரக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இன்று அமெரிக்கர்கள், 'நாமெல்லாம் நலிந்திருக்கிறோம்' என்பதால் உதவி செய்ய வரவில்லை; 'உலகத்தின் ஒரு பகுதி நலிந்திருந்தால், அந்த நலிவு மற்றப் பகுதியிலும் பரவுமே' என்பதால், இருக்கிற நலிவைப் போக்க முன்வருகிறார்கள்!

அமெரிக்கர்கள் இன்று, 'காக்கும் கரங்களாக' நமக்கு உதவிவருகிறார்கள்! அதற்கு முன்னால், தங்களுடைய கரங்களை வலிவுள்ள கரங்களாக ஆக்கிக் கொண்டார்கள்! அதைவிட அவர்கள், 'மற்றவருக்கு உதவ வேண்டும்' என்று — தங்கள் இதயங்களைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்!

"உலகம் நம்மீது காட்டும் பரிவை ஏற்றுக்கொண்டு, நாம் மற்றமர்கள் மீது பரிவு காட்டும் நிலை ஏற்படப் பாடுபடுவோம்" என்று இந்த விடுதலை நாளில் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்றென்றும் அமெரிக்கர்களே உதவி செய்து நாமே சாப்பிட்டுக்கொண்டிருந்தால், இந்தத் திட்டம் வெற்றிபெருது! அவர்கள் ஆரம்பித்து—விட்டுச் செல்லும் இடத்திலிருந்து நாம் நடத்திச் செல்லவேண்டும்.

ஒவ்வொருவரும், தாங்கள் ஈட்டும் வருமானத்தில் ஒரு சதவிகிதம் கல்விக்குச் செலவிட்டால் இந்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக நடைபெறும்."

துணைக் குடியரசுத் தலைவர் வாயால் 'தமிழ் நாடு'

குடியரசுத் துணைத் தலைவர் வி.வி. கிரி, 'சென்னை ராஜ்யம்' என்று தமது பேச்சினூடே ஒருமுறை குறிப்பிட்டார்.

உடனே, 'இல்லை, இல்லை; இப்போது, 'தமிழ் நாடு' என்று மாற்றிக் கூறினார்.

குழுமியிருந்தோர் அனைவரும், குடியரசுத் துணைத் தலைவர், 'தமிழ் நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்ததைக் கையொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததன் மூலம் வரவேற்றனர்.

—(கிண்டி பொறியியல் கல்லூரியில் 20—8—67-ல் நடந்த பட்டமளிப்பு விழாவில்)

மாநகராட்சி மத்திய குழுவுக்குப் புதிய தலைவர்

இரா. சடகோபன் தேர்வு

சென்னை, ஆக. 20—
முன்னாள் துணை மேயரும 94-வது வட்ட மாநகராட்சி உறுப்பினருமாகிய தோழர் இரா. சடகோபன், சென்னை மாநகராட்சி மத்தியக் குழுத் தலைவராக ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

தோழர் சடகோபன், 1959 முதல் மாநகராட்சிமன்ற உறுப்பினராக இருந்துவருகிறார்; ஏற்கனவே மாநகராட்சி கணக்குக் குழு உறுப்பினராகவும், பத்தாவது வட்டாரக் (சர்க்கிள்) குழுத் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

இதுவரை மத்தியக் குழுத் தலைவராக இருந்துவந்த தோழர் சா. கணேசனின் பதவிக்காலம் முடிவுற்றது.

சென்னையில் 'பூம்புகார்' பொருட்காட்சி— ஆக. 25 வரை நீடிப்பு

கடந்த 14-ம் நாள்முதல் சென்னையில் நடைபெற்றுவரும் 'பூம்புகார்' பொருட்காட்சியை ஏராளமான பொதுமக்கள் அன்றுடம் வந்து காண்பதில் ஆர்வம் காட்டுவதையொட்டி, ஆக. 25-ம் நாள்வரை காட்சி நீடிக்கப்பட்டிருக்கிறது. இடம்: 30/10 எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர்.

அமைச்சர்

கே.ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

ஆக. 23: காலை 10 மணி: கிருட்டினகிரி—வேளாண்மைக் கருத்தரங்கு;

ஆக. 24: காலை 10 மணி: கருங்காலிப்பட்டி—துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 11 மணி: செவ்வம்பட்டி—துவக்கப் பள்ளி கட்டிடத் திறப்பு; 12 மணி: கவுண்டனூர்—துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; மாலை 4-30 மணி: ஊத்தங்கரை—பள்ளிக் கட்டிடத் துவக்கவிழா; துணை வட்டத் துவக்கவிழா; 5-30 மணி: மிட்டப்பள்ளி—பள்ளிக் கட்டடத் திறப்பு விழா; மாலை 6-30 மணி: நாயக்கனூர்—பள்ளிக் கட்டிடத் திறப்பு; இரவு 7-30 மணி: பெரிய தள்ளப்பாடி—பள்ளிக் கட்டிடத் திறப்பு; 8-30 மணி: கோவிந்தபுரம்—பள்ளிக் கட்டிடத் திறப்பு;

ஆக. 25: காலை 9 மணி: காவிரிப்பட்டணம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 10 மணி: திம்மம்பட்டி—பள்ளிக் கட்டிடத்திறப்பு; 11 மணி: பாலக்கோடு—பேரூராட்சி வரவேற்பு;பகல் 12 மணி: மக்கனூர்—பள்ளிக் கட்டிடத் திறப்பு; 1 மணி: ஒகனேகல்—நாத்தப்பாடி ஊராட்சி வரவேற்பு; மாலை 3-30 மணி: பெண்ணகரம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5 மணி: நல்லம்பள்ளி — ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய வரவேற்புகள்; மேல்மட்ட நீர்த்தொட்டி திறப்பும், சங்கு ஒலி துவக்கிவைத்தலும். இரவு 7-30 மணி: சோழக்கோட்டை — ஊராட்சி பணிமனைத் திறப்பு.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

ஆக. 22 காலை 9 மணி: ஒசூர்—கால்நடைப் பண்ணை; மாலை 4 மணி: பாலக்கோடு ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5 மணி: கடசத்தூர் ஊராட்சி வரவேற்பு; மாலை 5-45 மணி: மேல் தருமபுரி — மேல்மட்ட நீர்த்தொட்டி பார்வையிடல்; 6-30 மணி: பன்னிகுளம் — ஊராட்சி வரவேற்பு; இரவு 7-15 மணி: தெரு விளக்கு ஏற்றிவைத்தல்; 8-30 மணி: ஏலகிரி—ஊராட்சி வரவேற்பு; 9-30 மணி: பாளையம் புதூர்—விவசாயிகள் சங்க வரவேற்பு.

ஆக. 23 காலை 10 மணி: தருமபுரி—வேளாண்மைக் கருத்தரங்கு.

ஆக. 24 காலை 9 மணி: அரூர்—வேளாண்மைக் கிடங்கு திறப்பு விழா; ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி வரவேற்புகள்; 11 மணி: கோட்டப்பட்டி—ஊராட்சி வரவேற்பு; மாலை 5 மணி: நரிப்பள்ளி ஊராட்சி வரவேற்பு; 6 மணி: சிக்கலூர்—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; ஊராட்சி வரவேற்பு; இரவு 7-30 மணி: அரூர்; 10 மணி: சேலம்.

ஆக. 25 காலை 11-30 மணி: ஓலக்கூர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு,

அமைச்சர்

சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

ஆக. 23: இரவு 7-15 மணி: நமசிவாயபுரம்—தெரு மின் விளக்குகள் ஏற்றிவைத்தல்; 7-45 மணி: தொட்டியம்—ஊராட்சிப் பணிமனைத் திறப்பு விழா; 8 30 மணி: கள்ளக்குறிச்சி — பொதுக்கூட்டம்;

ஆக. 24: காலை 9-30 மணி: சேலம் குகை—28-வது வட்டம் அண்ணா மன்றத் துவக்கவிழா; 10-30 மணி: அழகாபுரம்—ஆதித் திராவிட குடியிருப்பில் வரவேற்பு; 11-30 மணி: அம்மாபாளையம்—ஆதித்திராவிட குடியிருப்பில் வரவேற்பு; மாலை 3 மணி: சேலம்—தியாகராசர் தொழில்நுணுக்கப் பயிற்சிப் பள்ளி மாணவர் சங்கம் துவக்கிவைத்தல்; 4 மணி: ஓமியோபதி மருத்துவர் மாநாடு துவக்கிவைத்தல்; 6-30 மணி: சேலம் ஜான்சன் பேட்டை — ஆதித் திராவிடர் குடியிருப்பில் வரவேற்பு; இரவு 8 மணி: சேலம் 27, 28-வது வட்ட மக்கள் வரவேற்பு.

ரோஜா
பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

நடக்க இருப்பவை

22--8--67

ஈரோடு

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு கருங்கல்பாளையம் சின்ன மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: இ. ஆர். குமாரசாமி: பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், மு. சின்னசாமி எம்.எல்.ஏ., எஸ் ஏ. இராசமாணிக்கம் எம்.சி., ப. ச. விசுவநாதன், மா. சுப்பிரமணியம் பி.ஏ.,பி.எல்., நா. நடேசன் மற்றும் பலர்.

நெல்லை

தி. மு. க. சார்பில் இரவு 9 மணிக்கு நெல்லை சந்திப்பு பேருந்து நிலையத்தில்; தலைவர்: இரத்தினவேல் பாண்டியன்; பேசுவோர், அறிஞர் அண்ணா, ஏ.எல்.சுப்பிரமணியம்எம்.எல்.ஏ. (நெல்லை வட்ட தி.மு.க. சார்பில் சென்னை தீவிபத்து நிதிக்கு தொகை அளிக்கப்படும்.)

குன்னத்தூர்

தி. மு. க. சார்பில் காலை 9 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: க அன்பரசு; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், மு. சின்னச்சாமி எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

கள்ளக்குறிச்சி

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: தே. கேசவலு எம்.எல்.ஏ., பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, எஸ். பி. பச்சையப்பன் எம்.எல்.ஏ., எம். ஆனந்தன் எம்.எல்.ஏ., சி. நடராசன், ஏ. நாகராசன் பி.எஸ்சி., பி. எல்., கே. பெருமாள் எம்.ஏ., பி எல்., டி. சுகதேவ், எஸ். ஏ. கரீம், மு.பாண்டியன், சி.வேணு, மற்றும் பலர்.

23--8--67

சோழவந்தான

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு. சத்திரம் எதிரில்; தலைவர்: கே. வி. பொன்னுசாமி; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., ஆ. முனியாண்டி எம். எல். ஏ., பொன். முத்துராமலிங்கம் பி.ஏ., பி.எல்., கூ. குருசாமி, மா. வேலன், கோ. கிருட்டிணன், மற்றும் பலர்.

குழுக் கூட்டம்

"24—8—67 காலை 11 மணிக்கு வெள்ளக் கோவில் பயணர் விடுதியில், தாராபுரம் வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்க் கூட்டம் நடைபெறும்; வட்டத்திலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், வட்டக் கழகப் பிரதிநிதிகளும் அவசியம் கூட்டத்திற்கு வருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்" என வட்டக் கழகச் செயலாளர் மு. பழனிச்சாமி அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு. இராயபுரம், சென்னை,13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.